# யூலை – 31 – செவ்வாய்

## புனித லொயோலா இஞ்ஞாசியார்

**“விண்ணரசு இப்புதையலுக்கு ஒப்பாகும்.”** *மத். 13:43*

## முதல் வாசகம்: ஏரேமியா 14 : 17 - 22

ஆண்டவர் என்னிடம் கூறியது இதுவே.நீ அவர்களுக்கு இந்த வாக்கைக்கூறு. ”என்கண்கள் இரவு பகலாகக் கண்ணீர் சொரியட்டும். இடைவிடாது சொரியட்டும். ஏனெனில் என்மக்களாம் கன்னிமகள் நொறுங்குண்டாள். அவளது காயம் மிகப்பெரிது. வயல்வெளிகளுக்குச் சென்றால், இதோ! வாளால் மடிந்தவர்கள்! நகரில் நுழைந்தால், இதோ! பசியால் நலிந்தவர்கள்! இறைவாக்கினரும் குருக்களும் தங்களுக்கு முன்பின் தெரியாத நாட்டில் அலைகின்றனர். நீர் யூதாவை முற்றிலும் புறக்கணித்துவிட்டீரா? சீயோனை உம் உள்ளம் வெறுத்துவிட்டதா? நாங்கள் குணமாக முடியாதபடி ஏன் எங்களை நொறுக்கினீர்? நாங்கள் அமைதிக்காகக் காத்திருந்தோம் பயனேதும் இல்லை! நலம்பெறும் காலத்தை எதிர்பார்த்திருந்தோம் பேரச்சமே மிஞ்சியது! ஆண்டவரே! எங்கள் குற்றத்தையும் எங்கள் மூதாதையரின் தீமையையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் நாங்கள் உமக்கு எதிராய்ப் பாவம்செய்தோம். உம்பெயரை முன்னிட்டு எங்களை உதறித்தள்ளாதீர். உம்மாட்சிமிகு அரியணையை அவமதிக்காதீர். நீ எங்களோடு செய்த உடன்படிக்கையை நினைவுகூரும். அதனை முறித்துவிடாதீர். வேற்றினத்தாரின் தெய்வச்சிலைகளுள் மழை தரவல்லது எதுவும் உண்டா? வானங்கள் தாமாக மழை பொழிய முடியுமா? எங்கள் இறைவனாகிய ஆண்டவரே, நீர் அல்லவா அதைச் செய்யக்கூடியவர் நாங்கள் உம்மையே எதிர்நோக்கியுள்ளோம் ஏனெனில், இவற்றை எல்லாம் செய்பவர் நீரே.

**பதில்பாடல் :** ஆண்டவரே எங்கள் பாவங்களை மன்னித்தருளும்.

## நற்செய்தி: மத்தேயு 13 : 36 - 43

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தினரை அனுப்பிவிட்டு வீட்டுக்குள் வந்தார். அப்போது அவருடைய சீடர்கள் அவரருகே வந்து, ”வயலில் தோன்றிய களைகள்பற்றிய உவமையை எங்களுக்கு விளக்கிக் கூறும்” என்றனர்.அதற்கு அவர் பின் வருமாறு கூறினார் ”நல்ல விதைகளை விதைப்பவர் மானிடமகன். வயல், இவ்வுலகம் நல்லவிதைகள், கடவுளின் ஆட்சிக்குட்பட்ட மக்கள் களைகள், தீயோனைச் சேர்ந்தவர்கள். அவற்றை விதைக்கும் பகைவன், அலகை அறுவடை, உலகின்முடிவு. அறுவடைசெய்வோர், வானதூதர்.எவ்வாறு களைகளைப் பறித்துத் தீக்கிரையாக்குவார்களோ அவ்வாறே உலகமுடிவிலும் நடக்கும். மானிடமகன் தம்வானதூதரை அனுப்புவார். அவர்கள் அவருடைய ஆட்சிக்குத் தடையாக உள்ள அனைவரையும் நெறிகெட்டோரையும் ஒன்றுசேர்ப்பார்கள். பின் அவர்களைத் தீச்சூளையில் தள்ளுவார்கள். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும். அப்போது நேர்மையாளர் தம்தந்தையின் ஆட்சியில் கதிரவனைப்போல் ஒளிவீசுவர் கேட்கச்செவியுள்ளோர் கேட்கட்டும்.” என்றார்.

**தியானம்:** மண்ணரசு, விண்ணரசு இவ்விரு அரசுகளுக்கும் இடையிலான வேறுபாட்டை நன்கு உய்த்தறிய இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு உதவி புரிகின்றன. மண்ணும், மண்ணரசும் மனிதனுக்காகக் கடவுளால் படைக்கப்பட்டவை. ஆனால், நம் ஆதிப் பெற்றோரிடமிருந்து சூழ்ச்சி செய்து பகைவனாம் அலகை மண்ணுலக அதிகாரங்கள் அனைத்தையும் கைப்பற்றிக் கொண்டான். மீண்டும் மனிதனுக்கு அந்த அதிகாரங்களை வழங்கி அதன்வழியாக விண்ணரசை இம் மண்ணில் நிலை நாட்டவே கடவுள் தமது மகனை இறைவார்த்தை எனும் விதையாக இவ்வுலகில் விதைத்தார். இறைமகன் இயேசுவின் வார்த்தைகளின்படி வாழ்பவர்கள் இவ்வுலகிலேயே விண்ணரசை முன் சுவைக்கமுடியும். ஆனால் அவர்கள் தொடர்ந்தும் களைகளிடையே வாழ்ந்து தம் விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வேண்டியவர்களாகின்றோம். களைகளையும், அதை விதைக்கும் சாத்தானையும் வென்று வாழும் யுக்தியை இன்றைய நற்செய்திவழியாக இறைமகன் நமக்குச் சொல்லித்தருகின்றார். விண்ணரசு என்னும் புதையலைக் கண்டு கொண்டவர் போய்த் தமக்குள்ள யாவற்றையும் விற்று அதை வாங்கிக் கொள்கிறார் என்பதே அந்தயுக்தி. அதாவது, விண்ணரசை நாம் உரிமையாக்கிக் கொள்ளவேண்டு மென்றால், பணம், பதவி, மோகம் போன்ற இவ்வுலக நாட்டங்களை நாம் அகற்றி பயன்படுத்தி களைகள் நம்மை நசுக்கிவிடாமல் நம்பிக்கையுடன் வாழ்ந்தால் அறுவடைநாளில் நாம் களஞ்சியங்களில் சேர்க்கப்படுவோம்.